29.01.2026

LAOP.No.97/2022

ம. சா. 1 முத்துலட்சுமி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை :-

நில ஆர்ஜிதம் செய்த நிலம் பூசாரிபட்டி கிராமத்தில் சர்வே எண்.248/2ல் 924 சதுர மீட்டர் நிலமும் மற்றும் 231/3ல் 1056 சதுரமீட்டரும் ஆர்ஜிதம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி நிலங்கள் விவசாய நிலங்கள் என்றால் சரிதான். அந்த நிலத்தில் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்ட காலத்தில் மரங்கள் இருந்தது என்றும் அதைப்பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். இருந்தது. என்னுடைய ஆட்சேபனையிலோ மற்றும் முதல் விசாரணையிலோ நிலங்கள் இருந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். பூசாரிபட்டி கிராமம் சர்வே எண்.164/6 நிலம் என் நிலத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்றால் ½ கி.மீ. தூரத்தைவிட கம்மியாக இருக்கும். மேற்படி சர்வே எண் என் நிலத்திலிருந்து ஏறத்தாழ 2 கி.மீ. தொலைவில் உள்ளது என்றால் சரியல்ல. அவார்டு தொகை கொடுப்பதற்கு முன்பு என் தகப்பனார் சின்னச்சாமிக்கு அழைப்பாணை அனுப்பியிருந்தார்கள் என்றால் சரிதான். என் தகப்பனார் மேற்படி விசாரணையில் கலந்துகொண்டார் என்றால் சரிதான். அந்த விசாரணையில் என் தகப்பனாருக்கு அவருடைய சாதக பாதகத்தை விளக்கிக்கூற சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். எங்கள் நிலத்திற்கு சரியான முறைப்படி சந்தைமதிப்புத்தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்லை. நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை :- இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.01.29 17:20:51 +0530

Principal District Judge,
Dindigul.